


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 5.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், மூத்த வழக்கறிஞரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி. வில்சன் அவர்கள், அமெரிக்க நாட்டின், நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி நிறுவல் ஆணையக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தெலுங்கானா முதல்வர் ரேவந்த் அனுமுலா பிறந்தநாள்!

### வலைதளங்களில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, நவ.9-

தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் அனுமுலா அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் அனுமுலா அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**அவர் மகிழ்ச்சியோடும், நல்ல உடல்நலத்தோடும் இன்னும் பல்லாண்டுகள் மக்கள் பணியில் ஈடுபட்டுச் சிறந்திட விழைகிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## எஸ்.ஐ.ஆர். கொண்டுவந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து

# நவ.11 அன்று “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்”!

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிக்கை!

சென்னை, நவ.9-

**தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வருகிற 11 ஆம் தேதி அன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும் என்று மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.**

இதுகுறித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களின் கூட்டறிக்கை வருமாறு:

நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் S.I.R-க்கு தொடக்கம் முதலில் இருந்தே எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், எதேச்சாதிகாரப் போக்குடனும் தேர்தல் ஆணையம் செயல்பட்டு தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில், தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளது.

சிறுபான்மையினர் வாக்குகள், பா.ஜ.க.,வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறிவைத்து நீக்கும் நோக்கோடு - தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்குப் பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைச் செய்திட முயன்றிருப்பதோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் S.I.R திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்பதாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது.

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.)வின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது.

**வடகிழக்கு பருவமழையுடன் உச்ச காலத்தில் கொண்டுவருவதா?**

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழையின் உச்ச காலமான, கனமழை மற்றும் மோசமான வானிலை எதிர்பார்க்கப்படும் காலத்தில் தமிழ்நாடு வாக்காளர்களில் பெரும்பாலோர் கிராமப்புற மக்களாக - விவசாயிகளாக இருப்பதால், Enumeration Form-களைப் பெற்று நிரப்பி, திருப்பி அளிக்க நேரம் கிடைக்காது. இந்த செயல்முறையில் பெரும் எண்ணிக்கையில் வாக்காளர்கள் நீக்கப்படுவர். அதோடு, வருவாய்த் துறையும் கனமழையால் எழும் சூழ்நிலைகளைக் கையாள்வதில் ஈடுபட வேண்டும். எனவே, இந்த காலம் Enumeration-க்கு உகந்த காலம் இல்லை என்று மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகள் தனித்தனியே அறிக்கை விடுத்தும் - அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் இந்த S.I.R. ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல.

- மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் எதிர்பார்த்தவாறே 4.11.2025ஆம் தேதியிலிருந்து இன்று வரை களத்தில் S.I.R, பெரும்பாலான வாக்காளர்கள் நீக்கப்படும் அச்சத்தை உறுதிப்படுத்துகிறது. பெரும்பாலான இடங்களில் BLOக்கள் இன்று வரை கணக்கீட்டு படிவத்தை (Enumeration Form) தரத் துவங்கவில்லை.
- BLOக்களும் - BLA2க்களுக்கும் இடையே சரியான தகவல் தொடர்புகளை ஏற்படுத்தபடவில்லை. அவர்கள் ஒருங்கிணைக்கப்படவில்லை.
- சில இடங்களில், குறிப்பாக திருப்பூர் மாவட்டத்தில் BLOக்கள் Enumeration Form-ஐ ஒரு நாளிலேயே பூர்த்தி செய்து தர வலியுறுத்துகிறார்கள்.
- தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002/2005 வாக்காளர் பட்டியல்கள் முழுமையற்றதாக வும், குழப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன.

எனவே, இந்த S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளதை **கண்டித்து ‘மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி’யின் சார்பில் வருகிற 11-11-2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணியளவில், அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.**

இவ்வாறு தி.மு.கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், கு.செல்வபெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்மாநிலக் குழு செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்மாநிலக் குழு செயலாளர் மு.வீரபாண்டியன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் கே.எம்.காதர்மொகிதீன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன், மக்கள் நீதி மய்யம் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி பொதுச்செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

---

### கழக அரசின் மீது அவதூறுப் பிரச்சாரம்: எதிர்க் கட்சிகளின் முகமூடி மக்களிடம் நாளும் கிழிபட்டுக் கொண்டிருக்கிறது!

## பெண்கள் பாதுகாப்பு குறித்த எடப்பாடியின் அற்பத்தனம் அம்பலமானது!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, நவ.9-

**பெண்கள் பாதுகாப்பு குறித்த எடப்பாடியின் அற்பத்தனம் அம்பலமானது என கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பாக இல்லை என்கிற செய்தி எப்படியாவது செவியில் எட்டிவிடாதா? என்கிற காத்திருப்பில் விஷமப் பிரசாரத்தை நாள்தோறும் நடத்திக் கொண்டிருக்கின்றனர் எடப்பாடியும் இன்னும் சில எதிர்க் கட்சிகளும்!

ஒரு குற்றம் நடந்தவுடனே அதை வைத்து எப்படி அரசியல் ஆதாயம் தேடலாம் என்று அற்பப் புத்தியோடு செயல்பட்டு வரும் எதிர்க்கட்சிகளின் அரைவேக்காட்டுத்தனத்தைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறது கோவை நிகழ்வு.

கோவை சாலையில் நடந்து சென்ற பெண் காரில் கடத்தப்படுவதாகவும், சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்த ஆறாம் வகுப்பு மாணவி ஒருவர் மாயமாகி உள்ளதாகவும் அதனால் தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பே இல்லை என்று உண்மை நிலை தெரிவதற்கு முன்பே முந்திரிக் கொட்டையாக வந்து அயோக்கியத்தனமான அறிக்



கையை வெளியிட்டார் ‘பச்சைப் பொய்’ பழனிசாமி. கோவை நிகழ்வில் காவல் துறை தீவிரமான விசாரணையை மேற்கொண்டது. அந்தச் சம்பவம் குடும்பத் தகராறில் ஏற்பட்டது என தெரிய வந்தது. ”என்னை யாரும் கடத்தவில்லை” என அந்தப் பெண் வீடியோ மூலம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

இதே போல நேற்று முன் தினம் இரவு காணாமல் போன கண்ணகி நகர் மாணவியைத் தனிப்படை அமைத்து காலை 6.30 மணிக்கே காவல்துறை மீட்டு வீட்டில் ஒப்படைத்து விட்டது. உண்மைகள் இப்படியிருக்கத் தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பாக இல்லை என பழனிசாமி விஷமப் பிரச்சாரம் செய்ததற்கு வெட்கித் தலைகுனிய வேண்டும். எடப்பாடி பழனிசாமி வழியில் அன்புமணி ராமதாஸ், நயினார் நாகேந்திரன் போன்றவர்களும் உண்மை அறியாமல் தங்களது அரசியல் சுயலாபத்திற்காகப் பெண்களின் பாதுகாப்பை அரசியல் பகடைக்காயாக உருட்டிக் கொண்டிருப்பதைத்தான் அற்பத்தனமான அறிக்கைகள் அம்பலப்படுத்தியிருக்கின்றன.

தி.மு.க. அரசுக்கு எந்த வகையிலாவது களங்கம் கற்பிக்கலாம் என நினைத்து இதுபோன்ற அவதூறு பிரச்சாரத்தை மேற்கொள்ளும் எதிர்க்கட்சிகளின் முகமூடி ஒவ்வொரு நாளும் மக்களிடம் கிழிபட்டுக் கொண்டிருக்கிறது. பெண்களின் நலனையே முதன்மை நோக்கமாகக் கொண்டு செயலாற்றிவரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு அவர்களது பாதுகாப்பில் எந்தச் சமரசத்துக்கும் இடம்கொடுக்காது. அது திரும்பத் திரும்ப நிரூபணம் ஆகிக் கொண்டேதான் இருக்கும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### “உடன்பிறப்பே வா” –

## 3-ஆம் கட்ட தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை முகாம்!

### எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைக்கிறார்! புதுவை தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா அழைப்பு!

*புதுச்சேரி, நவ.9-*

*புதுச்சேரி மாநில அமைப்பாளரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சிவா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: -*

*தி.மு.க. தலைவர், தமிழ்நாடு அரசின் முதல்வர் தளபதி அவர்கள் ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், இதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் மண்-மொழி-மானம் காக்க, தி.மு.கழகத்தின் சார்பில் “உடன்பிறப்பே வா” பரப்புரையை முன்னெடுக்க ஆணையிட்டுள்ளார்.*

*புதுச்சேரி, மாநிலத்தில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து, பாசிச பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் அவலங்களை எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச் சாவடியி*



*லும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்குகளைக் திமுக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற இலக்கும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.*

*அதன்படி, தலைமைக் கழக ஒருங்கிணைப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., கடந்த மாதம் 6-ஆம் தேதி முதல் கட்டமாக 5 தொகுதிகளிலும், இரண்டாம் கட்டமாக 15-ஆம் தேதி 8 தொகுதிகளில் திமுக உறுப்பினர் சேர்க்கும் பணியை வீடு, வீடாகச் சென்று தொடங்கி வைத்தார்.*

*இந்நிலையில் மூன்றாம் கட்ட திமுக உறுப்பினர் சேர்க்கை முகாம் இன்று (9-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை) காலை 09.00 மணி அளவில் அரியாங்குப்பம் தொகுதி பழைய அரியாங்குப்பம் ரோடு வீராம்பட்டினம் ரோடு சந்திப்பில் இருந்து தொடங்குகிறது.*

*தொடர்ந்து மணவெளி தொகுதி பூரணாங்குப்பம் கிராமத்திலும், ஏம்பலம் தொகுதி கரிக்கலாம்பாக்கத்திலும், பாகூர் தொகுதிக்கு உட்பட்ட மதிக்கிருஷ்ணாபுரம், பாகூர், குருவிநத்தம் கிராமங்களிலும், நெட்டப்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட நெட்டப்பாக்கம் கிராமத்திலும் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெறுகிறது.*

*எனது தலைமையில் நடைபெறும் உறுப்பினர் சேர்க்கை முகாமை, ஒருங்கிணைப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., வீடு, வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைக்கிறார்.*

*முகாமிற்கு அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.*

*இந்த நிகழ்ச்சியில், திமுக மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் என அனைவரும் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.*